CFM/L/105

# காசநோய்




mercy MALAYSIA

CHA

- காசநோய் *மைக்கோபக்றீரியம் ரியூபக்குளோசிஸ்* பற்றீயாவினால் ஏற்படுகின்றது
- காற்றினால் பரவக்கூடிய தொற்றுநோய்.
- உலகில் 1/3 பகுதியினர் காசநோய்த் தொற்றலுக்கு உள்ளாகியுள்ளனர்.
- ஒருவரின் உடல் எதிர்ப்புச்சக்தியை இழக்கும் போதே காசநோய் ஏற்படும்.

*காசநோய் உருவாகும் விதம்*

- ஒருவரின் உடலில் காசநோய்க் கிருமிகள் செல்லும் போது குருதியில் உள்ள திண்குழியங்கள், நிணநீர்க் குழியங்கள் என்பவற்றின் செயற்பாட்டினால், சிறைப் பிடிக்கப்பட்டு செயலற்ற நிலைக்கு மாற்றப்படும்.
- ஒருவரின் உடலில் நோய் எதிர்ப்புச்சக்தி குறையும்போது சிறைப்பிடிக்கப்பட்ட கிருமிகள் சிறையினின்று விடுபட்டு நோயினை ஏற்படுத்துகின்றன.
- காசநோய் பொதுவாக நுரையீரலைத் தாக்குகின்றது.பின்னர் குருதிமூலம் உடலின் ஏனைய பகுதிகளைச் சென்றடைகின்றது. அவையாவன: மூளை மென்சவ்வு, சிறுநீரகம், பலோப்பியன் குழாய், விதை, என்பு, மூட்டு, நுரை யீரல் சுற்றுச் சவ்வு, இருதயம், நிணநீர் மூலம் நிணநீர் முடிச்சினைச் சென்றடையும்.

*காசநோய் பரவும் முறைகள்*

காசநோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர்

- இருமும்போது
- தும்மும்போது
- கதைக்கும்போது
- எச்சில், சளியினைத் துப்பும் போது

காசநோய்க்கிருமிகள் காற்றினை அடைக்கின்றன.

♣ காசநோய்க் கிருமிகள் உள்ள காற்றினை ஒருவர் சுவாசிக்கும் போது அது அவரின் நுரையீரலை அடைகின்றது.

*காசநோயின் அறிகுறிகள்*



மூன்று வாரங்களிற்கு மேலாக தொடர்ச்சியான இருமல்

இரவுநேரத்தில் மெல்லிய காய்ச்சல்





நிறை குறைதல்



உணவில் விருப்பமின்மை



இரவு நேரத்தில் அதிகளவு வியர்த்தல்



அதிகளவு களைப்பாக இருத்தல்



சளியுடன் இரத்தம் வெளியேறல்

*ஏனைய அறிகுறிகள்*

♣ நிணநீர்க் கணுக்கள் வீங்குதல் (பொதுவாகக் கழுத்துப் பகுதி)

♣ இருமும் போது நெஞ்சில் வலி ஏற்படல்

*சிகிச்சை மூலம் முழுமையாக சுகப்படுத்தலாம்.*

- ஆலோசனையின் பிரகாரம் மருந்துகளை சரியான அளவில் 6 மாதங்கள் தொடர்ச்சியாக தினமும் எடுக்க வேண்டும்.
- இதனை உறுதிப்படுத்தவே DOTS (நேரடி சோதனை) சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஆஸ்பத்திரியில் தங்க வேண்டியதில்லை.
- நோயாளியின் விருப்பப்படி சிகிச்சை அளிக்கும் நபரை தெரிவு செய்யலாம்.
- சுகாதார பணியாளர் முன்னிலையில் மருந்தை குடித்துவிட்டு வழமை போன்று அன்றாட பணிகளுக்கு செல்லலாம்.
- தற்போதைய நவீன சிகிச்சையின் மூலம் விழுங்கும் மருந்துகளின் எண்ணிக்கையை குறை த்துள்ளதால் நோயாளிக்கு மேலும் இலகுவாக இருக்கின்றது.

*நோய் பரவாமல் தடுக்கும் வழிமுறைகள்*



மிகவிரைவில் நோயை இனம்காணுதலும் நீண்ட சிகிச்சை எடுத்துக் கொள்ளுதலும்



இருமும் போதும், தும்மும்போதும் மூக்கை வாயை மூடிக் கொள்ளுதல்



அனைத்து இடங்களிலும் சளியை துப்பாமல் அதனை ஒரு பாத்திரத்தில் சேர்த்து புதைத்தல் அல்லது எரித்தல்

♣ காசநோய்க் கிருமிகள் உள்ள காற்றினை ஒருவர் சுவாசிக்கும் போது அது அவரின் நுரையீரலை அடைகின்றது.

*காசநோயின் அறிகுறிகள்*



மூன்று வாரங்களிற்கு மேலாக தொடர்ச்சியான இருமல்



இரவுநேரத்தில் மெல்லிய காய்ச்சல்



நிறை குறைதல்



உணவில் விருப்பமின்மை



இரவு நேரத்தில் அதிகளவு வியர்த்தல்



அதிகளவு களைப்பாக இருத்தல்



சளியுடன் இரத்தம் வெளியேறல்

*ஏனைய அறிகுறிகள்*

♣ நிணநீர்க் கணுக்கள் வீங்குதல் (பொதுவாகக் கழுத்துப் பகுதி)

♣ இருமும் போது நெஞ்சில் வலி ஏற்படல்

*சிகிச்சையை இடையிலே நிறுத்துவது மிகவும் ஆபத்தானது.*

- ♣ பிழையான மருந்து, குறைந்த அளவுகளில் எடுப்பது போன்றவை மட்டுமல்லாமல் தினசரி எடுக்காமல் விடுவதும் இதற்கு காரணமாகின்றது.
- ♣ இதன் போது கிருமிகள் பெருகி மருந்துகளால் அழிக்க முடியாத நிலைக்கு தள்ளப்படும்.
- ♣ அதாவது மருந்துகளுக்கு கட்டுப்படாத காச நோய் நிலைமை ஏற்பட இடமுண்டு.
- ♣ இது பல வகை மருந்து எதிர்ப்பு (Multi Drug Resistant) காசநோய் எனப்படும்.
- ♣ மேற்படி நோயாளிக்கு சிகிச்சைக்கு செலவாகும் பணம் சாதாரண நோயாளிக்கு செலவாகும் பணத்தைப் போன்று நூறு மடங்காகும்.
- ♣ சிலருக்கு இதனால் மரணம் கூட ஏற்படும்.ஆகவே தொடர்ச்சியாக ஆறுமாதங்கள் சிகிச்சை எடுப்பதன் மூலம் காசநோயிலிருந்து முற்றாக விடுபடலாம்.


தயாரிப்பு உதவி

- ☐ இ.சாந்தகுமார்
- ☐ யோ.பி..அன்பழகன்
- ☐ தி.கணாதீபன்
- ☐ ந..துஷியந்தி
- ☐ ம.சோபிகா



வெளியீடு

சுகாதார கல்விசார் பொருட்கள் கயாரிப்பு அலகு

சமுதாய மருத்துவதுறை

மருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்